**உயிர்த்தெழுந்த ஆண்டவர் மீதுள்ள விசுவாசம், குழப்பம் நிறைந்த இவ்வுலகில் நமக்கு நம்பிக்கையையும் அமைதியையும் அளிக்கிறது**

அல்லேலூயா! ஆண்டவராகிய கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார்! சண்டை சச்சரவுகளால் நிறைந்துள்ள இவ்வுலகில், சட்டத்தின் ஆட்சிக்கு (rule of law) மாறாக, பொருளாதார, இராணுவ மற்றும் தொழில்நுட்ப வலிமையைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்தும் "வல்லமையே நீதி" (rule of might) என்னும் போக்கு, நம் உலகைப் பாதுகாப்பற்ற இடமாக மாற்றியுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ளவர்கள், குறிப்பாக மிகவும் நலிந்த பிரிவினர், கடுமையான அநீதி, உடல் காயங்கள், இடப்பெயர்வு மற்றும் மரணத்தை அனுபவிக்கின்றனர்.

நேரடியாகப் போர்களில் ஈடுபடாத பகுதிகளுக்குக் கூட அதன் தாக்கம் தீவிரமாகப் படர்கிறது. விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் தடங்கல்கள், சந்தையின் ஏற்றத் தாழ்வுகள், சேமிப்புகளின் இழப்பு, கட்டுக்கடங்காத பணவீக்கம் போன்ற பொருளாதார சிக்கல்கள் மக்களை பாதிக்கின்றன.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பே அச்சுறுத்தலுக்குள்ளாகி, சுற்றுச்சூழல் விளைவுகளும் பேரழிவை உருவாக்குகின்றன. இன்றளவும் பலர் குண்டுவீச்சுகளிலிருந்து தப்பிக்க புகலிடம் தேடி “பதுங்குகுழிகளில்” தஞ்சமடைகின்றனர்; மேலும் பலர் தங்கள் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாகத் துன்புறுகின்றனர்.

இந்த அனைத்துப் போர்களுக்கும் காரணம் என்ன? அதன் அடிப்படை வேராக இருப்பது பேராசைதான் – அதிகாரத்திற்கான பேராசை, நிலத்திற்கான ஆசை, பொருளாதார ஆதாயத்திற்கான வேட்கை. பிறரின் இழப்பில் தம் நாட்டின் செழிப்பை நாடும் மனப்பான்மையே இதன் மையம். ஆனால், மாறாக நாம் உலகின் வளங்களைப் பகிர்ந்து கொண்டு, ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்து, அனைவரின் முன்னேற்றத்திற்கும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

சுரண்டலின் மூலம் பெருமையை நாடுவது இறுதியில் சுயஅழிவைத் தரும். உண்மையான மாண்புடையவர்கள் மனிதகுலத்தின் பொது நலனுக்காக உழைத்து, சகோதரத்துவத்தையும், எல்லாருக்குமான சமமான மரியாதையையும் வளர்த்திடுகின்றனர்.

ஆண்டவர் தம் திருத்தூதர்களிடம் கூறியது போல: “உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மத்தேயு 20:26-28).

தனிப்பட்ட நிலையிலோ அல்லது கூட்டு நிலையிலோ, சமூகத்திலோ அல்லது சர்வதேச உறவுகளிலோ, வளர்ச்சி மற்றும் வெற்றிக்கான நமது விருப்பம் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இதையே உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம் பாடுகள், இறப்பு, உயிர்த்தெழுதல் வழியாக வெளிப்படுத்தினார். அவர் உயிர்த்தெழுந்தபின் திருத்தூதர்களுக்கு அளித்த முதல் வரம் அமைதியே: “உங்களுக்கு அமைதி உண்டாகுக!”

அமைதிக்கான பாதை வன்முறையற்ற வாழ்வும், சுயநலமற்ற தியாகமுமாகும் என்பதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தந்தையாகிய இறைவனின் உறுதிப்படுத்தலாகும். தம் எதிரிகளுக்கும், தூற்றுபவர்களுக்கும் எதிராகப் பதிலடி கொடுக்க மறுத்த இயேசுவின் நிலையும், தம் மக்கள் மீதான அவரது சுயநலமற்ற அன்புமே, வெறுப்பையும் பிரிவினையையும் வென்றது. வெறுப்பைக் காட்டிலும் அன்பும், மரணத்தை விட வாழ்வும் வலிமையானவை என்பதை அவரது உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்துகிறது. இரக்கம், பரிவு, மன்னிப்பு, பணிவு, சுயநலமின்மை, மற்றும் இறைவனின் நீதியின்மீதான ஆழ்ந்த நம்பிக்கை – இவையே உலகில் அமைதியை மீண்டும் நிலைநாட்டும் சக்திகள்.

உண்மையில், சில உலகத் தலைவர்களால் உருவாக்கப்படும் அளவிட முடியாத துயரங்கள் சொல்லொணாதவை; பரிதாபமாக, இவை “அமைதி” என்ற பெயரில் திணிக்கப்படுகின்றன. ஆனால் உண்மை என்னவென்றால்: போர் ஒருபோதும் அமைதியை உருவாக்காது. உரையாடல், ஒருவருக்கொருவரின் சரியான புரிதல், மற்றும் அனைவரும் இணைந்து செயல்படுதலே நிலையான அமைதிக்கான ஒரே பாதையாகும்.

இதனால்தான், அமைதி எனும் அரிய பரிசை வழங்கிய உடனே, இயேசு தம் திருத்தூதர்களுக்கும் அதையே பகிர்ந்து வழங்கும்படி கட்டளையிட்டார்: “தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்” (யோவான் 20:21).

இன்று, நாம் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் வேளையில், உண்மையின் பக்கம் நிற்க வேண்டும். அநீதியால் உண்டாகும் எல்லா வேதனைகளையும் மீறி, நாம் மன்னிக்கத் தயாராகவும், மற்றவர்களுக்கு அமைதியின் தூதர்களாக மாறவும் முனைவோம்.

இவ்வுலகின் காயங்களை ஆற்றுவதற்கான ஒரே மருந்து, நமது வளங்களைப் பகிர்ந்து கொள்வதும், ஒருவரை ஒருவர் கண்ணியத்துடன் நடத்துவதும், தவறு செய்தவர்களை மன்னிக்கத் தயாராக இருப்பதுமே ஆகும். அன்பும் மன்னிப்பும் மட்டுமே வெறுப்பையும் அநீதியையும் வெல்லக்கூடிய சக்திகளாகும். நமது நாட்டினுள்ளும் உலகம் முழுவதும் அமைதி நிலவிட நாம் உறுதியுடன் உழைக்க வேண்டும்.

அரசியல் தலைவர்கள், பெருநிறுவன நிர்வாகிகள், சமயத் தலைவர்கள் ஆகியோர் அனைவரும் இரக்கம், பரிவு மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் அமையும்

சர்வதேச ஒழுங்கை மதித்து செயல்படுவதற்காக நாம் சிறப்பாக இறைவனை வேண்டிக்கொள்ள வேண்டும். உலகின் நிலையான அமைதி, தலைவர்களின் செயற்பாடுகளையும் அவர்கள் வகுக்கும் கொள்கைகளையும் பொறுத்தே அமைகிறது.

இறைவனையும் அவரது படைப்புகளையும் மதிக்காது செயல்பட்டால், மனிதகுலம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் அபாயம் உருவாகிறது. ஆகையால், உண்மையான அமைதியை உருவாக்கும் வல்லமை இறைவேண்டலிலேயே இருக்கிறது. அது இனம், தேசம், மதம் ஆகிய எல்லைகளைக் கடந்து அனைவரிடமும் உண்மையான நீதி மற்றும் இரக்கத்துடன் நடக்க நம்மைத் தூண்டுகிறது.

இறைவேண்டல் நமக்கு இறைவனின் குரலை உணரச் செய்கிறது; அது நமக்கு ஒரே தந்தையும் படைப்பாளரும் உள்ளார் என்பதையும், நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் என்பதையும் அது நினைவூட்டுகிறது. இறைவனின் பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டு, நாம் இறைவனை நேசிப்பதாகக் கூற முடியாது. ஏனெனில் ஒவ்வொரு உயிரும் அவருக்குப் பெரும் மதிப்புடையது – நம் எதிரிகளின் உயிரும் கூட அவருக்கு மேலானது.

ஆகையால், நாம் ஒருபோதும் தைரியத்தையும் நம்பிக்கையையும் இழந்து விடக் கூடாது. “என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்” (யோவான் 16:33) என்று அருளிய உயிர்த்தெழுந்த ஆண்டவர்மீதான நம் விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொள்வோம்.

இவ்வுலகம் இறைவனுக்குரியது. இக்கட்டான காலங்களிலும் அவர் நம்மை வழிநடத்துவார். ஆகையால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து, அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையால், அவரது மன்னிப்பை உலகிற்கு வழங்கி, அமைதியும் நீதியும் நிறைந்த வாழ்வை மேற்கொள்வதன் மூலம் இறை அரசை நிலைநாட்டுவோம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புடன்,

✠ வில்லியம் கர்தினால் கோ
சிங்கப்பூர் பேராயர்

5 ஏப்ரல் 2026 அன்று பிரகடனம் செய்யப்பட்டது.